லலிதா சீதாராமன்

மஹாலிங்கபுரம்,
சென்னை - 34

5/1/2000

# ஐம்பெருங் காப்பியங்களில் இந்துமதக் கருத்துகள்

ஐம்பெருங்காப்பியங்களில் இந்துமதக் கருத்துகள் எப்படி விரவி இருக்கின்றன என்பதைப் பற்றி இந்து மிஷன் கட்டுரைப் போட்டி நடத்துகிறது என்று அறிய நேரிட்ட போது சிலர் சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவை சமண பௌத்த மரபுகளை அல்லவா காட்டுகின்றன என்று வியப்படைந்தனர். மதம் என்பது நீர்த்துறையாகிய இறைவனை அடைய உதவும் படிக்கட்டு ஆகும் என்ற இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் கருத்து இங்கு கவனிக்கத்தக்கது. நீர்த்துறைக்குப் பல திசைகளிலிருந்தும் செல்ல படிக்கட்டுக்கள் இருப்பது போல் பல மதங்களும் வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனைச் சென்றடைய வழி சொல்கின்றன. ஆசையை முழுவதும் அகற்ற முடியாவிட்டாலும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் எனவும் நம்முடைய அனாவசியத் தேவைகளைப் பெருக்கிக்கொள்ளாமல் ஏழைகளுக்கு உதவ வேண்டும் எனவும் உறவினர்க்கும் நண்பர்களுக்கும் அண்டை அயலார்க்கும் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் எனவும் விருந்தினர்களை மனமார உபசரிக்க வேண்டும் எனவும் நோயாளிகளுக்கும் வயது முதிர்ந்தவர்களுக்கும் பணிவிடை செய்ய வேண்டும் நன்மை செய்தால் நமக்கு நன்மையே கிடைக்கும் எனவும் தீமை செய்தவர்களுக்குத் தீங்கு விளையும் எனவும் மனமுருகிப் பிரார்த்தனை செய்தால் இறைவன் கைவிடமாட்டான் எனவும் நமக்கு இந்த வாழ்க்கையைக் கொடுத்திருக்கிற இறைவனை மனதார நன்றியுடன் நினைக்க வேண்டும் எனவும் எல்லா மதங்களும் பொதுவாகக் கூறுகின்றன. ஆகக் கொள்கைகள் எல்லா மதங்களுக்கும் ஒன்றுதான். நிர்வாகவியலில் (Management studies) கொள்கைகளுக்கும் (policies) விதிமுறைகளுக்கும் (rules) வித்தியாசம் பிரித்துக்காட்டும்போது கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவர பல நுண்ணிய விதிமுறைகள் தேவைப்படுகின்றன, கொள்கைகள் நிலையானவை ஆனால் விதிமுறைகள் தேச கால சந்தர்ப்பங்களுக்கேற்ப மாறக்கூடியவை என்று பொருள்பட கூறப்படுகிறது. இந்த நுண்ணிய விதிமுறைகள்தான் மதங்களை மாறுபட்டவை போல் தோற்றமளிக்கச் செய்கின்றன.

மதங்களின் நோக்கம் பாகுபாடின்றி ஒரு மனிதனிடம் நற்சிந்தனைகளைத் தோற்றுவிப்பதே ஆகும். தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளாமல் ஒரு மதம் தன்னுடைய நற்கருத்துக்களைக் கூறும் போது மனிதன் அந்தக் கருத்துகளின்பால் அதிகம் கவரப்படுகிறான். உதாரணமாக, சென்னையில் ஆயிரம் விளக்கு மசூதியின் வெளிப்புறச் சுவர்களில் நிறைய திருக்குரான் வாசகங்கள் எழுதப்பட்டிருக்கும். அவற்றில் சில பொதுப்படையாகவும் சில மதக் குறிப்புடனும் காணப்படும். பொதுப்படையாக எழுதப்பட்டிருக்கும் வாக்கியங்கள் எல்லா மதத்தினரையும் உள்ளத்தைத் தொடுவதாக இருக்கும். உதாரணத்திற்கு, 'அவர்கள் நம்பிக்கை இழந்த பிறகும் அவன்தான் மேலும் மழையைப் பொழிவித்து உயிர்களைக் காப்பாற்றுகிறான்' என்ற வாக்கியம் பாகுபாடின்றி எல்லோரையும் இறைவனை நினைக்கச் செய்யும்.

மதங்களை அடையாளங்காட்டிப் பேசத் தேவையில்லை என்று கருதினால் 'ஐம்பெருங்காப்பியங்களில் இந்து மதக் கருத்துகள்' என்ற கட்டுரைப்போட்டியில் ஏன் கலந்து கொள்ள வேண்டும் என்ற நியாயமான வினா எழுகிறது. சந்தைப்பொருளாதார (market economy) மனப்பான்மை எல்லாத்துறைகளையும் ஆக்ரமித்துக் கொண்டுவருகிறது. விளம்பர உலகத்தில் அமைதியாகப் பின்தங்கி இருந்தால் நம் எதிர்காலத் தலைமுறையினருக்கு சரியான வழிகாட்டத் தவறியவர்களாகி விடுவோம். 'நான் இங்கு இருக்கிறேன், நான் இங்கு இருக்கிறேன்' என்று குரல் கொடுத்துக் கொண்டு செல்வது நம்மைப் பின்தொடர்ந்து வரும் அடுத்த தலைமுறையினர் பாதை மாறிச் செல்லாமலிருக்க உதவும். ஐம்பெருங்காப்பியங்களைப் பற்றி சிறு குறிப்பு கண்டபிறகு கட்டுரையை மேலே தொடரலாம். தமிழ் மொழியின் ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களைப் பின்வரும் பாடல் இவ்வாறு கூறுகிறது.

'சிந்தா மணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்
கந்தா மணிமேகலை புனைந்தான் - நந்தா

வளையாபதி தருவான் வாசவனுக்கு ஈந்தான்

திளையாத குண்டல கேசிக்கும்.'

தமிழ் மொழிக்கு வாழ்த்துப் பாடிய சுத்தானந்த பாரதியார் ஐம்பெருங்காப்பியங்கள் தமிழ்மொழியை எவ்வாறு அழகு படுத்துகின்றன என்பதை

'காதொளிரும் குண்டலமும் கைக்குவளை
  யாபதியும் கருணை மார்பின்
மீதொளிர்சிந் தாமணியும் மெல்லிடையில்
  மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிர்பூந் தாளிணையும் பொன்முடிசூ
  ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத்
  தாங்குதமிழ் நீடு வாழ்க!'

நல்ல சுவையுடன் கூறுகிறார்.

சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள் சமண சமயத்தைச் சேர்ந்தவர். காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு. மணிமேகலையின் ஆசிரியர் சாத்தனார். மணிமேகலை ஒரு பௌத்த காப்பியம். மணிமேகலையின் கதை சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகக் கூறப்படுகிறது. சீவக சிந்தாமணியின் ஆசிரியர் திருத்தக்க தேவர். இவர் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவர் என்பர். இவர் சமணத்துறவி ஆவார். வளையாபதியிலிருந்து எழுபத்து இரண்டு பாடல்களே கிடைத்திருக்கின்றன. இந்நூலின் ஆசிரியர் சமணர் என்பதும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதும் தெரிகிறது. ஆனால் நூலாசிரியரின் பெயர் தெரியவில்லை. புத்தபிரானின் பெருமையைக் கூறும் குண்டலகேசியின் ஆசிரியர் நாதகுத்தனார். குண்டலகேசியிலிருந்து பத்தொன்பது பாடல்களே கிடைத்திருக்கின்றன.

கவிஞர் கண்ணதாசன், தனது 'அர்த்தமுள்ள இந்துமதம்' என்னும் நூலின் முன்னுரையில் 'தமிழில் ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, சீவகசிந்தாமணி நான்கும் சமண பௌத்த மரபுகளைக் காட்டுவதை நாம் எண்ணிப்பார்த்தால், சமண பௌத்தத்தின் செல்வாக்கு தென்குமரி வரை எப்படி இருந்தது என்பதை அறிய முடியும்.' என்று கூறுவதோடு காலப்போக்கில் இந்தியாவில் இம்மதங்கள் இந்துமாக்கடல் போன்ற இந்து மதத்தில் ஐக்கியமாகிவிட்டதையும் கூறுகிறார்.

இந்து மதக் கோட்பாடுகளான மங்கல மரபுகள் ஐம்பெருங்காப்பியங்களில் நிறையக் காணப்படுகின்றன. மாலையில் விளக்கேற்றி வழிபடுவது பற்றி

'பகல் மாய்ந்த மாலை மணி விளக்கம் காட்டி'

என சிலப்பதிகாரத்தில் கனாத்திறம் உரைத்த காதையிலும்

'அந்தி அந்தணர் செந்தீப் பேண
பைந் தொடி மகளிர் பலர் விளக்கு எடுப்ப'

என மணிமேகலையிலும் குறிப்பிடப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டத்தில் கோவலன் கண்ணகி திருமணம்

'சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது கண்பார்கண் நோன்பு என்னை'

என மிகவும் வயதான அந்தணன் வேதநெறிப்படி சடங்குகளை நிகழ்த்த, வானத்திலுள்ள ஒப்பற்ற நட்சத்திரமாகிய அருந்ததி போலும் கற்புடைய கண்ணகியைக் கோவலன் மணந்து தீயினை இருவரும் வலம் வந்த காட்சி விவரிக்கப்படுகிறது.

'விளக்கினர் கலத்தினர் விரித்த பாலிகை

முளைக்குட நிரையினர் முகிழ்த்த மூரலர்

போதொடு விரிகூந்தல் பொலனறுங் கொடி அன்னார்'

என மங்கலப் பொருட்களை ஏந்தி மலரணிந்த அடர்ந்த கூந்தலையுடைய மகளிர் புன்முறுவலுடன் மணமக்களை நெருங்கிவந்து மலர் தூவி வாழ்த்தியதாகச் சிலப்பதிகாரம் விவரிக்கிறது.

மணிமேகலையில் இந்திரவிழாவுக்கு நடந்த ஏற்பாடுகளை விவரிக்கும் பாடல்

'தோரண வீதியும் தோம் அறு கோட்டியும்

பூரண-கும்பமும் பொலம் பாலிகைகளும்

பாவை-விளக்கும் பல உடன் பரப்புமின்

காய்க் கலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்

பூக் கொடி வல்லியும் கரும்பும் நடுமின்'

எனத் தோரணங்கள், பாலிகைகள், விளக்குகள், கமுகு மரம், வாழை மரம் என இந்து மதத்தின் மங்கல மரபுகள் பின்பற்றப்பட்டதைத் தெரிவிக்கிறது.

நாம் கடவுளைப் பல உருவங்களில் வணங்குவது வாழ்க்கையின் பல கோணங்களிலும் பல நிலைகளிலும் கடவுளை நினைத்துக்கொள்வதற்காக என்று அறிய வேண்டும். கோவில் செல்லும் போது விநாயகர் முன் நின்று

'பாலுந் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை

நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்ந்

துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு

சங்கத் தமிழ் மூன்றுந் தா.'

என்று வேண்டிக் கொண்டு நம் கர்வமெல்லாம் அடங்க வேண்டும் என்பதற்காகத் தலையில் குட்டிக் கொள்கிறோம். முருகனின் முன் நின்று இளமையும் வீரமும் ஞானமும் கேட்கிறோம். அனுமனின் சந்நிதியில் நின்று

'புத்திர்பலம் யசோதைர்யம்

நிர்ப்பயத்வமரோஹதா

அஜாட்யம் வாக்படுத்வஞ்ச

ஹனுமத் சரணாபவேத்.'

என்று புத்தி, பலம், புகழ், தைரியம், பயமற்ற தன்மை, முயற்சி, வாக்குத்திறன் எல்லாம் கொடுக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். சரஸ்வதி தேவியின் முன் நின்று கல்வியும் கலைகளும் அளிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம். திருமகளிடம் நின்று போதுமான பண வசதி அளிக்குமாறு, அதாவது எளிய வாழ்க்கையைக் கடன் தொல்லை இல்லாமல் நடத்த அருள் புரியுமாறு வேண்டிக் கொள்கிறோம். அம்பாளின் புஷ்ப அலங்காரத்தில் மனம் மயங்கிச் சொக்கிப் போகிறோம். சிவனின் முன் 'ஓம் நமச்சிவாய' என்று சொல்லி 'சிவனே' என்று நிற்கிறோம். இராமர் சீதை சந்நிதியில் நின்று வணங்குவதன் மூலம் மனித வாழ்க்கையில் வரும் துன்பங்களை எதிர்கொள்ளும் மன ஆற்றலைப் பெறுகிறோம். சிவகாமி நடராஜர் சந்நிதியில் நின்று இல்லறம், தாளம் தப்பாமலும் லயத்துடன் கூடியும் இருக்க வரம் கேட்கிறோம். கண்ணனின் முன் நின்று 'என் கடமைகளையும் வேலைகளையும் நான் திறம்படச் செய்ய வேண்டும். அதற்காக நான் கர்வப் படாமலிருக்கும் தன்மையையும் நீதான் எனக்குக் கொடுக்க வேண்டும்' என்று வேண்டுகிறோம். துர்க்கையின் முன் நின்று 'தீமைகளை விலக்கி நன்மைகளை ஏற்படுத்த வேண்டிக்கொள்கிறோம். நவக்ரஹங்களைப் பலரும் சேர்ந்து ஒரு குறுகிய பாதையில் சுற்றி வரும் போது மற்றவர்களின் வேகத்திற்கேற்ப நாமும் சுற்றி ஒரு அனுசரிப்புத் தன்மையை வளர்த்துக் கொள்கிறோம். தீபாராதனையின் போது வேகமாக ஒலிக்கும் மணி ஓசை நம்மைச் சிலிர்க்க வைக்கிறது. நம் மனத்தில் இருக்கும் தயக்கங்களை எல்லாம் அகற்றி நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

இந்துக்களின் இந்த வழிபாட்டு முறை பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் நிறையக் கிடைக்கின்றன.

'சங்கமும் சக்கரமும் தாமரைக் கைஏந்திச்

செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்

கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து

மங்கை உருவாய் மறையேத்த வேநிற்பாய்.'

எனத் துர்க்கை வழிபடப்படுகிறாள்.

'மாயஞ்செய் வாள் அவுணர் வீழ'

என்ற வரி வஞ்சம் செய்த அரக்கரைத் துர்க்கை வீழ்த்தியதைக் கூறுகிறது. கோவலனைப்பிரிந்த புகார், இராமனைப் பிரிந்த அயோத்தி போல் துன்புற்றது என இளங்கோவடிகள் விவரிக்கிறார்.

'பெருமகன் ஏவ லல்ல துயாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போல'

என்று 'தந்தை ஏவலைக் கேட்டு அதன்படி நடப்பதே சிறந்தது; அவன் பணியில்லாது அரசாட்சியே கிடைப்பினும் தஞ்சம் என்று அதனைப் பற்றி யாண்டும் கிடப்பது தீமையேயாகும்' எனக் கருதி இராமன் தந்தையின் கட்டளைப்படி கானகம் சென்றது போற்றிக் கூறப்படுகிறது. காடுகாண் காதையில் மாங்காட்டு மறையோன் தான் திருவரங்கத்தில்

'விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்'

திருவேங்கடத்தில்

'செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்'

காண விரும்பி வந்ததைக் கூறுகிறான்.

'அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்
வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டும்'

என அரிய வேதங்களில் உணர்த்தப்படும் ஐந்தெழுத்து மந்திரமான நமச்சிவாய என்பதும் எட்டெழுத்து மந்திரமான நமோநாராயணாய என்பதும் பிறவித்துயரைப் போக்கும் என்ற கருத்தும் மாங்காட்டு மறையோன் வாய்மொழியாகக் கூறப்படுகிறது.

தீய நிமித்தங்கள் தோன்றிய போது கறவைப்பசுக்களும் கன்றுகளும் துயர் நீங்குவதற்காக மாதரி பாடுவதாக ஆய்ச்சியர் குரவையில் வரும் பாடல்கள் தேர்ந்த கிருஷ்ணபக்திக் காவியத்தில் வரும் பாடல்களைப் போல் இனிக்கின்றன.

'கன்று குணிலாக் கனிஉதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ;

பாம்பு கயிறாக் கடல்கடந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழீ.'

என, வஞ்சனையால் வந்து நின்ற கன்றினையே குறுந்தடியாகக் கொண்டு அவ்வாறே நின்ற விளவின் கனியை உதிர்த்தவனுமான, மற்றும் மேரு மலை என்னும் மத்தில் வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றிப் பாற்கடலைக் கடைந்தவனுமான கண்ணனின் குழலோசையைக் கேட்கும் அவா வெளிப்படுகிறது.

'மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்து ஆரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாஎன்ன நாவே
நாராய ணாவென்னா நாஎன்ன நாவே'

என, 'நாராயணா எனக் கூறாத நா, என்ன நாவோ' என்று உருக்கமாக ஆய்ச்சியர் பாடுவதாக இளங்கோவடிகள் சித்தரிக்கிறார்.

சிலப்பதிகாரம் நீங்கலான மற்ற ஐம்பெருங் காப்பியங்களில் இந்துக்களின் வழிபாட்டு முறை இவ்வாறு ஏற்றத்துடன் விவரிக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும். மணிமேகலையில் அந்தணர் செய்த வேள்வி பற்றி சற்று நிந்தனையாகவே குறிப்பிடப்படுகிறது. சீவகசிந்தாமணியில் ஓரிரு இடங்களில் இந்துமதத்தின் சில தெய்வீக அல்லது புராணப் பாத்திரங்கள் சற்று சங்கடமான உதாரணங்களில் கையாளப்பட்டிருக்கின்றன.

மதம் நமக்கு வாழ்க்கைக்கு வழி காட்ட ஒரு உபகரணம் போலாகும். ஒரு உபகரணத்தின் வெற்றி அதை உபயோகிக்கும் மனிதனுக்கு அதைப்பற்றிய ஞாபகம் இல்லாமலிருப்பதுதான். அதாவது பார்வைக்காகக் கண்ணாடி அணிந்திருப்பவர்க்கு தான் கண்ணாடி அணிந்திருக்கிறோம் என்றும் செயற்கைப் பல் பொருத்திக் கொண்டிருப்பவர்க்கு தனக்கு உண்மையான பல் இல்லை என்றும் தோன்றாமலிருந்தால் அது அந்த உபகரணத்தின் வெற்றி. அதுபோல் தான் இந்த மதத்தைச் சார்ந்திருக்கிறோம் என்று ஒரு மனிதனுக்கு அன்றாட வாழ்க்கையில் தோன்றவில்லையானால் அது ஒரு நல்ல அறிகுறி. இந்து மதத்தைப் பொறுத்த வரை அது ஒரு வாழ்க்கை முறைதான். அது தன்னைச் சார்ந்தவர்களுக்குக் கடுமையான விதிமுறைகள் எதையும் விதிக்கவில்லை. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் 'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் கூறப்பட்டாலும், கோவில் சென்று முறைப்படி தொழ முடியாவிட்டாலும் செயலில் தூய்மையும் கடமை உணர்ச்சியும் மனதில் பக்தியும் இருந்தால் போதும் என்று அனுசரித்துக் கொள்ளப் படுகிறது. பகவான் விஷ்ணு ஒரு முறை நாரதரிடம் நாள் முழுவதும் உழைத்துக் களைத்து முறையாகத் தன்னை வழிபட நேரம் கிடைக்காமல் மனதால் மட்டுமே நினைக்கும் ஒரு ஏழைத்தொழிலாளியே தன்னுடைய பரம பக்தன் என்று கூறியதாக நமது பெரியவர்கள் கூறுகிறார்கள். ஆதிசங்கரர் தம்முடைய சௌந்தர்ய லஹரியில் ஒரு சுலோகத்தைப் பின்வரும் பொருளில் அமைத்திருக்கிறார்.

"ஹேபகவதி, 'எல்லாம் உனக்கு அர்ப்பணம்' என்ற நோக்குடன், நான் பேசுவதெல்லாம் உன் மந்த்ர ஜபமாகவும், என் உடலசைவுகள் உன் முத்திரைகளாகவும், என் நடைகள் உன் பிரதட்சிணமாகவும், நான் புசிப்பதெல்லாம் உனக்குச் செய்யும் ஹோமமாகவும், நான் படுப்பது உனக்குச் செய்யும் நமஸ்காரமாகவும், இம்மாதிரி என் சுகத்திற்காக நான் செய்யக்கூடிய செயலெல்லாம் உன் பூஜையாகவே ஆகட்டும்" என்று கூறியிருப்பது தன்னை ஆத்மார்த்தமாகக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதைவிட சிறந்த பூஜை எதுவும் இல்லை என்று உணர்த்துகிறது. நம்முடைய அன்றாட வாழ்க்கை, அரசியல் முதலியவற்றில் தலையிடாத இந்துமதம் தன்னைச் சார்ந்தவர்களுக்கு அதிக சுதந்திரத்தை வழங்கி ஒரு ஜனநாயக மதமாகத் திகழ்கிறது. அந்தச் சுதந்திரத்தைச் சரியாகப் போற்றி, அதிக உரிமை எடுத்துக் கொள்ளாமல் சுயக்கட்டுப்பாட்டுடன் வாழ்வதன் மூலம் நாம் இந்து மதத்தின் பெருமையைக் காப்பாற்ற முடியும்.

இந்துமதம் தன்னைச் சார்ந்தவர்களுக்கு தன்னைப் பரப்ப வேண்டும் என்ற விற்பனைப் பிரதிநிதி போன்ற கடமை எதையும் கொடுக்கவில்லை. இந்தியாவில் மதச்சுதந்திரம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அதனால் தானாக முன்வந்து (voluntary) ஒருவர் வேறு மதத்தைத் தழுவுவது தவறாகாது என்று சமீப காலங்களில் ஒரு தர்க்கம் முன் வைக்கப்படுகிறது. 'தானாக முன்வந்து ' - இது உண்மையில் எவ்வளவு தூரம் தானாக ஏற்படுகிறது என்பது மனச்சாட்சியுடன் கவனிக்கப்பட வேண்டிய விஷயமாகும். இறைவன் எல்லா உயிர்களையும் நேரில் கவனித்துக் கொள்ள முடியாது என்பதற்காகத் தாயைப் படைத்தான் என்ற கூற்றை எல்லா மதத்தவரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் அந்தத் தாய் என்ன நினைக்கிறாள்? தன்னுடைய குழந்தை இறைவனை வணங்குவதைப் பார்க்கும் போது அவள் நிம்மதிப் பெருமூச்செறிகிறாள். 'இனிமேல் நான் அருகில் இல்லாவிட்டாலும், இந்தக் குழந்தை சோதனைக் காலங்களில் கடவுளை வணங்கி அமைதி பெறுவான்' என்று நம்பிக்கை கொள்கிறாள். அதாவது தன் மகன் அல்லது மகள் வாழ்க்கைப் பயணத்தில் சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதற்கு ஒரு சான்றாகக் கடவுள் வழிபாடைக் கருதுகிறாள். இது அந்தத் தாய்க்குத் தெரிந்த, அவளுக்கு அவளுடைய பெற்றோர் சொல்லிக் கொடுத்த, பாதையாக இருந்தால்தான் நிம்மதி கொடுக்கும். ஏனென்றால் அந்தப் பாதை அவளுக்குப் பழகிய பாதை. இதிலிருந்து மாறிச் செல்லும் மகனை அல்லது மகளைப் பார்த்துத் தாய் மனம் பதைக்கிறாள். வாழ்ந்து மறைந்து தெய்வமாகி விட்ட தாய் கூட மகன் அல்லது மகளுக்காக மானசீகமாகத் துணை நிற்பதாக நாம் நினைக்கிறோம். எல்லாத் தாய்மார்களுக்கும் இது பொருந்தும். திருநாவுக்கரசர் சமண மதத்தைத் தழுவிய போது அவருடைய தாய் ஸ்தானத்தில் இருந்த அவருடைய தமக்கை திலகவதியார் தாங்கொணாத துயரத்தை அடைந்தார். மேலும், பழகிய பாதையே ஒருவனுக்குத் துன்பம் ஏற்படுகிற போது

அதிக நம்பிக்கை கொடுக்கும் என்பதைத் திருநாவுக்கரசர் சூலை நோயால் வருந்திய போது திரும்பவும் இந்து மதத்திற்குத் திரும்பியதிலிருந்தும்

'கற்றுணை பூட்டி கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சியாவவே'

என்று உறுதியாகப் பாடியதிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். எனவே பிறர் மதம் மாற ஒரு கருவியாக இருப்பவர் தான் மதம் மாறினால் தன் தாய் என்ன நினைப்பாள் என்று சிறிது சிந்தித்துப் பார்த்தால் மதமாற்ற முயற்சிகளால் வரும் கசப்புணர்ச்சிகளையும் காழ்ப்புணர்ச்சிகளையும் தவிர்க்கலாம்.

இளங்கோவடிகளின் காலத்தில் பல மதத்தவர்களும் ஒன்று கூடி ஒருவருக்கொருவர் மரியாதையுடன் வாழ்ந்து வந்தனர் என்பதற்குச் சிலப்பதிகாரம் நல்ல சான்றளிக்கிறது. உள்நோக்கம் எதுவுமின்றி மங்காட்டு மறையோன் வுந்தியடிகளிடம் தன் மத நம்பிக்கைகளைப் பகிர்ந்து கொண்டதும் பதிலுக்குக் கவுந்தியடிகள் தன் மத நம்பிக்கைகளைக் கூறி அவனிடம் 'உங்கள் வழியில் நீங்கள் செல்லுங்கள், நான் என் வழியில் செல்கிறேன்' என்று விடைபெறும் நயமும் கவனிக்கத்தக்கது. தேவந்தியும் கண்ணகியும் இதேபோல் தத்தம் மத நம்பிக்கைகளைத் தோழமையுடன் பகிர்ந்து கொள்கின்றனர். மணிமேகலை பல சமயச் சான்றோர்களிடம் சென்று அறம் கேட்டதாக அறிகிறோம்.

ஐம்பெருங் காப்பியங்களில் முக்கியக் கருத்தாக விளங்கும் முற்பிறவிக் கொள்கையும் ஊழ்வினைப் பயனும் இந்துமதத்தோடு மிகவும் தொடர்புடையவை.

'பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்'

என்ற குறள் விளக்கும் நியதியும், வினைப்பயன் இப்பிறவியில் மட்டுமின்றி இனிவரும் பிறவிகளுக்கெல்லாம் தொடர்ந்துவரும் என்ற நியதியும் மக்களுக்கு மரண வாள் (Democles' sword) தலைக்கு மேல் தொங்குவதை ஞாபகப்படுத்துகிறது. கம்பராமாயணத்தில் இராமனுக்கு மகுடம் சூட்டும் செய்தியை அறிவிக்க எண்ணித் தசரதன் அழைத்தபோது இராமன் சென்றதை வருணிக்குமிடத்தில், கம்பர், ஊழ்வினை முன்னே செல்ல இராமன் பின்னே சென்றதாகக் கூறுவார். சிரவணகுமார் என்னும் வாலிபனை இருளில் அறியாமல் தசரதன் கொன்றுவிட, அவ்வாலிபனது தந்தை வயதான காலத்தில் அனுபவித்த துயரந்தான், தசரதனுக்கு சாகும் தறுவாயில் மகன் யாரும் அருகில் இல்லாதிருந்த நிலை ஏற்படக் காரணமாயிருந்தது என்றும் நாம் கேள்விப்படுகிறோம்.

'அரசியல் பிழைத்தோர்க்கு அறங் கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்'

ஆகிய மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு சிலப்பதிகாரம் எழுந்தது என்று பதிகம் கூறுகிறது. வணிகம் செய்து பொருளீட்டலாமெனக் கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குப் புறப்பட்டதை 'ஊழ்வினை கடைஇ உள்ளம் துரப்ப' தீவினையின் ஏவலின்படிப் புறப்பட்டதாக இளங்கோவடிகள் கூறுகிறார். கோவலன் ஒற்றைச் சிலம்பைப் காலதூதன் போல வந்த பொற்கொல்லனிடம் கொடுத்ததை

'கூற்றத் தூதன் கைதொழு தேத்தப்
போற்றருஞ் சிலப்பின் பொதிவாய் அவிழ்த்தனன்'

என்று சித்தரிக்கிறார். கோவலன் பழம்பிறப்பில் ஒரு வணிகனை ஒற்றன் என்று கருதி மன்னனிடம் அழைத்திச் சென்று கொன்றுவிட்டதாலேயே இப்பிறப்பில் அவனுக்கு இத்துன்பம் நேர்ந்ததாகச் சிலப்பதிகாரத்தில் சொல்லப் படுகிறது.

'புதுவோன் பின்றைப் போனது என் நெஞ்சம்
இதுவோ, அன்னாய்! காமத்தியற்கை?
இதுவே ஆயின் கெடுக தன் திறம்'

என்று மணிமேகலை தன் மனது உதயகுமரன் பால் சென்றதற்காகத் தன்னை நொந்து கொண்டதும், உதயகுமரன் முற்பிறவியிலும் அதற்கு முன் வேறு சில பிறவிகளிலும் அவள் கணவனாக இருந்ததால்தான் அந்நிலை ஏற்பட்டது எனப் பிறகு தெரிந்து கொண்டதும் மணிமேகலையில் காண்கிறோம்.

'வினையின் வந்தது வினைக்கு விளைவு ஆயது'

என்று மணிமேகலையின் தோழி சுதமதி 'பண்டை வினைப் பயனாய் இவ்வுடம்பு வாய்த்தது. இவ்வுடம்பு இனி வரும் நல்வினை தீவினைகளுக்கு விளைநிலமாக அமைவது. இதனை உணர்ந்து தெளிவு பெறுவாயாக' என்று உதயகுமரனுக்கு அறிவுரை கூறுகிறாள். அறிவுரைகளைக் கேட்டுத் திருந்தாத உதயகுமரன் காயசண்டிகை வேடத்திலிருந்த மணிமேகலையை நோக்கி அடியெடுத்து வைப்பதையும் தன்னுடைய மனைவியைத்தான் தவறான எண்ணத்துடன் நெருங்குகிறான் என நினைத்துக் காயசண்டிகையின் கணவன் அவன் மீது வாளெறிந்து கொல்லப்போவதையும்,

'ஊழ் அடியிட்டு அதன் உள்ளகம் புகுதலும்'

என்று சாத்தனார் வருணிக்கிறார். இந்தக் கொலைக்குற்றம் செய்த காயசண்டிகையின் கணவனிடம்

'அவ்வினை நின்னையும் அகலாது ஆங்கு உறும்'

என்று கந்திற்பாவை உரைப்பதாகக் காண்கிறோம்.

சீவகசிந்தாமணியில் சீவகன் இன்பம் துன்பம் இரண்டையும் பழவினைப் பயன் என்று கருதி வருத்தமோ, மகிழ்வோ அடையவில்லை என்று அறிகிறோம்.

'நஞ்சு குடித்தாலும் நவை யின்றுதவம் நின்றால்
அஞ்சி யொளித்தாலும் அரணில்லை தவம் உலர்ந்தால்
குஞ்சரத்தின் கோட்டிடையும் உய்வர் தவம் மிக்கார்
அஞ்சலிலர் என்றும் அறனே களைகண் என்பார்'

என்ற சீவகசிந்தாமணிப் பாடல் தவப்பயன் இல்லாதவர்கள் சாவைக்கண்டு எங்கு ஓடி ஒளிந்தாலும் தப்பமுடியாது எனவும், தவப்பயன் இருந்தால் யானைத் தந்தங்களுக்கிடையே சிக்கிக் கொண்டாலும் சாகாமல் தப்பமுடியும் எனவும் நல்வினைப்பயனின் பெருமையைக் கூறுகிறது.

வளையாபதியின் கடவுள் வாழ்த்து

'தொழுவல் தொல்வினை நீங்குக என்றுயான்'

என்று பண்டைவினைகள் தொலைய வேண்டுகிறது. 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்னும் கருத்திற்கேற்ப

'வினைபல வலியினாலே
வேறுவேறு யாக்கை ஆகி,
நனிபல பிறவி தன்னுள்
துன்புறூஉம் நல்லுயிர்க்கு
மனிதரின் அரியதாகும்
தோன்றுதல்'

என்ற வளையாபதிப்பாடல் வினைக்கேற்றவாறு பிறவி அமைகிறது என்பதை வலியுறுத்துகிறது.

'பூரித்தல் வாடுதல் என்று இவற்றால் பொலிவு
இன்றி நின்றான்
பாரித்தது எல்லாம் வினையின் பயன்
என்ன வல்லான்.'

என்ற குண்டலகேசிப்பாடல் நேர்ந்ததெல்லாம் வினைப்பயன் என்ற மெய்யுணர்வுடன் எல்லாச் சூழ்நிலைகளிலும் அமைதியாக இருப்பதன் பெருமையை உணர்த்துகிறது.

'எனதெனச் சிந்தித்தலினால் மற்று
இவ்வுடம்பு இன்பத்துக்கு ஆமேல்
தினைப் பெய்த புன்கத்தைப் போலச்
சிறியவும் மூத்தவும் ஆகி
நுனைய புழுக்குலம் தம்மால்
நுகரவும் வாழவும் பட்ட

இனைய உடம்பினைப் பாவி

யான்எனது என்னல் ஆமோ?'

என்ற குண்டலகேசிப்பாடல் இவ்வுடல் அரிசிச் சோறு போன்ற சிறியவும் பெரியவுமான புழுக்களால் இடமாகவும் உணவாகவும் கொள்ளப்பட்ட இழிதகைமையுடையதால் 'யான்' என்றும் 'என்னுடையது' என்றும் கூறத்தகாது என்று கூறி பற்றையும் அகங்காரத்தையும் அகற்றவேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'

என்னும் மணிமேகலைப் பாடல்வரியும்,

'துற்றுள வாகத் தொகுத்து விரல்வைத்த'

என்று தொடங்கும் வளையாபதிப்பாடலும் அன்னதானம் செய்வது சிறந்தது என்ற கருத்தை விளக்குவனவாக அமைகின்றன.

இந்துமதக் கருத்துகளும், அவை ஐம்பெருங் காப்பியங்களில் விரவிக் கிடக்கும் பான்மையும் இன்னும் பலவாறாக எழுதப்பட வாய்ப்பிருந்த போதிலும் சுருங்கச் சொல்லுதலே சுவைபட இருக்கும் என்பதால் கட்டுரை இத்துடன் முடித்துக் கொள்ளப் படுகிறது. ஐம்பெருங் காப்பியங்களை ஒரு கண்ணோட்டம் விடத் தூண்டிய இந்து மிஷனுக்கும், மேற்கோள்கள் எடுத்துக் கொள்ள வசதியாக ஐம்பெருங் காப்பியங்களை மூலத்துடனும் தெளிவுரையுடனும் பதிப்பித்திருந்த வர்த்தமானன் பதிப்பகத்தாருக்கும், பல அரிய புத்தகங்களை வாங்கிச் சேர்த்து விலை மதிப்பற்ற நூலகத்தை உழியர்களுக்காக உருவாக்கிக் கொடுத்திருக்கும் எங்கள் இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி நிர்வாகத்திற்கும், இக்கட்டுரையை நான் எழுதுவதற்கு என்னுடன் பலவிதங்களில் ஒத்துழைத்த என் குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.